# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2039/35 - 2017 ඔක්තෝබර් මස 06 වැනි සිකුරාදා - 2017.10.06

*2039/35 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**மேல் மாகாண மாகாண சபை**

மேல் மாகாண தகவல் தொழில்நுட்பவள அபிவிருத்தி அதிகார சபை நியதிச் சட்டம்

*2000 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மேல் மாகாணத்தில் தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி நியதிச் சட்டத்தினை இல்லாதொழித்து மேல் மாகாண கல்வி, கலை மற்றும் கலாச்சார நடவடிக்கை விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், அத்துடன் தகவல் தொழில்நுட்ப அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட புதிய 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாண தகவல் தொழில்நுட்பவள அபிவிருத்தி நியதிச் சட்டம் கீழே காணப்படுகின்றது. இந்தப் புதிய நியதிச் சட்டம் 2017.09.12 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வர வேண்டும்.*

கே. டப். ரஞ்ஜித் சோமவன்ச,  
கல்வி, கலை மற்றும் கலாச்சார நடவடிக்கை,  
விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம்  
அத்துடன் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்,  
மேல் மாகாணம்.

பத்தரமுல்லை,  
*2017, ஒற்றோபர் 04.*

**2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க**  
**மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி நியதிச் சட்டம்**

*மேல் மாகாண மாகாண சபைக்கு கையளிக்கப்பட்ட விடயங்களுக்கு இணங்க காரியங்களையும் செயற்பாடுகளையும் மேற்கொள்வதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகளை ஒழுங்காகவும், வினைத்திறன் மிக்கதாகவும், பலாபலன் மிக்கதாகவும் பயன்படுத்துவதற்காகவும் காணப்படும் முறைகளின் பகுப்பாய்வு மற்றும் அதிகரிப்பு, கணினி தொழில்நுட்பம் அத்துடன் அதனோடு இணைந்த நடவடிக்கைகளை ஒழுங்காகவும் மற்றும் விஸ்தரிப்பதற்காகவும், தகவல் தொழில்நுட்பத்தின் பலாபலனை மக்களுக்குப் பெற்றுக் கொடுப்பதற்காகவும் அதனோடு இணைந்த விடயங்களுக்காக ஏற்பாடுகளை ஏற்படுத்துவதற்காகவும், 2000 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் தகவல் தொழில்நுட்ப நியதிச்சட்டத்தினை இல்லாதொழிப்பதற்கான நியதிச்சட்டம் ஒன்றாகும்.*

1A - PG 3720 — 37 (2017/10)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் மேல் மாகாண மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

குறுந் தலைப்பும் நடைமுறைக்கு வரும் தினமும்.

1. இந் நியதிச்சட்டம் 2017 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மேல் மாகாணத்தின் தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி அதிகார சபை நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் மேல்மாகாணத்தின் ஆளுநரின் அங்கீகாரம் கிடைத்த தினத்தில் இருந்து நடைமுறைக்கு வரவேண்டும்.

## பகுதி I

### மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி அதிகார சபையை அமைத்தலும் அதன் அமைப்பும்

தகவல்தொழில் நுட்ப வள அபிவிருத்தி அதிகார சபையை ஸ்தாபித்தல்.

2. (1) இன்னகத்துப்பின் “அதிகார சபை” என்று அழைக்கப்படும் மேல் மாகாண தகவல் தொழில்நுட்ப வள அபிவிருத்தி அதிகாரசபை என அழைக்கப்படும் அதிகார சபை ஒன்று இங்கு ஸ்தாபிக்கப்படுகின்றது.

(2) அதிகார சபை, தொடர்ச்சியாகப் பேணிச் செல்லும் மற்றும் பொது இலட்சினை காணப்படும் தனது பெயரில் வழக்கினைத் தொடர மற்றும் வழக்குத் தொடரப்படக்கூடிய தாபனம் ஒன்றாகும்.

அதிகார சபையின் முகாமைத்துவச் சபை.

3. அதிகார சபையின் நடவடிக்கை தொடர்பான நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் கீழே ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளபடி நியமிக்கப்பட்டும் (இதன்னகத்துப் பின் சபை என அழைக்கப்படும்) முகாமைத்துவச் சபைக்கு ஒப்படைக்கப்பட வேண்டியதுடன், அந்த முகாமைத்துவ அதிகார சபை, உத்தியோகபூர்வ அங்கத்தவர்கள் நான்கு (04) பேரையும், அமைச்சரினால் பின்வருவோரில் இருந்து நியமிக்கப்படும் மூன்று (03) அங்கத்தவர்களையும் கொண்டதாக வேண்டும்.

(அ) பதவி நிலையின் அடிப்படையில் நியமிக்கப்படும் அங்கத்தவர்கள்:

(i) மேல் மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயற்சி)
(ii) மேல் மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (நிதி)
(iii) மேல் மாகாணத்தின் பிரதிப் பிரதம செயலாளர் (பொறியியல்)
(iv) மேல் மாகாணத்தின் மாகாண கல்விப் பணிப்பாளர்

(ஆ) அமைச்சரினால் பின்வருபவர்களிலிருந்து நியமிக்கப்படும் மூன்று அங்கத்தவர்கள்.

(i) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப வியாபார முகாமைத்துவம் மற்றும் சட்டம் ஆகிய துறைகளுக்குரிய கல்வித் தகைமை மற்றும் அனுபவம் உள்ள இரண்டு பேர் மற்றும்,

(ii) இன்னும் ஒருவர் முதலமைச்சரினை வினவி நியமிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு நியமிக்கப்படுபவர் அதிகார சபையின் தவிசாளராக நியமிக்கப்பட வேண்டும்.

அங்கத்தவராகுவதற்குரிய தகுதியின்மை.

4. ஏதாவது ஒரு அங்கத்தவர் ஒருவர்,

(1) பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், மாகாண சபை உறுப்பினர் ஒருவர் அல்லது உள்ளூராட்சி மன்ற அங்கத்தவர் ஒருவர் /உறுப்பினர் ஒருவர் அல்லது,

(2) இலங்கைப் பிரஜை அல்லாத ஒருவர் அல்லது,

(3) இலங்கை அல்லது வேறு நாடு ஒன்றில் காணப்படும் ஏதாவது சட்டம் ஒன்றின் கீழ் சித்த சுயாதீனம் அற்ற ஒருவர் எனத் தீர்மானிக்கப்பட்டிருந்தவர் அல்லது வெளியிடப்பட்டிருந்தவர் அல்லது,

(4) இலங்கை அல்லது வேறு நாடு ஒன்றில் நீதிமன்றத்தினால் சிறைத்தண்டனையைப் பெற்ற அல்லது பெற்றிருந்தால் அவ்வாறான நபர் ஒருவரை சபையின் அங்கத்தவர் ஒருவராக நியமிப்பதற்கு அல்லது அவ்வாறான ஒருவராக தொடர்ந்து செயற்படுவதற்கு தகைமையற்றவராக வேண்டும்.

(5) தகவல் தொழில்நுட்பம் மற்றும் அது தொடர்பான வியாபாரம் ஒன்றினை நடாத்திச் செல்லும் தனியார் தாபனம் ஒன்றின் உரிமையாளர் அல்லது அவரின் முகவர் ஒருவராக இருந்தால் அல்லது

நியமிக்கப்பட்ட அங்கத்தவரின் பதவிக்காலம்.

5. (1) அதிகார சபைக்கு நியமிக்கப்பட்ட ஒவ்வொரு அங்கத்தவரும் அவர் நியமிக்கப்பட்ட தினம் தொடக்கம் கணக்கிடப்படும் அத்துடன் அவர் நியமிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அமைச்சரினால் தீர்மானிக்கப்படும் மூன்று வருடங்களுக்கு மேற்படாத காலம் பதவி வகிக்க வேண்டும். மேலும் 7 (1) உப பிரிவின் கீழ் பதவியிலிருந்து அகற்றப்பட்டாலொழிய மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதியானவராக வேண்டும்.

(2) நியமிக்கப்படும் அங்கத்தவர் பதவியிலிருந்து அகற்றப்படும் சந்தர்ப்பத்தில் அல்லது கேட்டு விலகிக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் மீண்டும் நியமிக்கப்படும் அங்கத்தவர்/அங்கத்தவர்களினால் மிகுதியாகக் காணப்படும் பதவிக் காலத்திற்காக மட்டும் பதவி வகிக்க வேண்டும்.

சபையில் தவிசாளரின் பதவிக் காலம்.

6. (1) 7 (1) உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் தவிசாளரின் பதவிக் காலம் அதிகார சபையில் அவரது அங்கத்துவக் காலத்திற்கு உட்பட்டதாக வேண்டும்.

(2) நோய்வாய்ப்பட்டால் அல்லது பிற அங்கவீனம் அடைந்தால், அல்லது இலங்கைக்கு வெளியில் இருந்ததன் காரணமாக, அல்லது தமது பதவிக்காலத்தை வகிப்பதற்கு தவிசாளருக்கு தற்காலிகமாக முடியாதவிடத்து அவருக்குப் பதிலாக செயற்படுவதற்கு அமைச்சரினால் 3 (ஆ) (ii) ஏற்பாட்டின் கீழ் முகாமைத்துவ அதிகார சபையின் அங்கத்தவர் ஒருவர் நியமிக்கப்படலாம்.

(3) தவிசாளரினால் அமைச்சருக்கு அனுப்பப்பட்ட கடிதம் ஒன்றின் மூலம் தவிசாளர் பதவியிலிருந்து விலகிக் கொள்ள முடியும்.

(4) அமைச்சரினால் தவிசாளரின் நடவடிக்கை தொடர்பாக திருப்திப்பட முடியாதவிடத்து முதலமைச்சரிடம் வினவி தவிசாளரின் நியமனத்தை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.

(5) சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தவிசாளர் தலைமை தாங்க வேண்டும்.சபையின் ஏதாவது கூட்டம் ஒன்றுக்கு தவிசாளர் வருகை தராதவிடத்து, வருகை தந்த முகாமைத்துவ அதிகார சபையின் அங்கத்தவர் ஒருவரை அக்கூட்டத்திற்கு தலைமை தாங்க அவர்களில் இருந்து தெரிவு செய்ய வேண்டும்.

அங்கத்துவத்தில் இருந்து அகற்றுதல்.

7. (1) ஏதாவதொரு நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவரை எந்தவொர காரணத்தினையும் தெரிவிக்காமல், அமைச்சரினால் வர்த்தமானப் பத்திரிக்கையில் குறிப்பிடப்படும் கட்டளையின் மூலம் பதவியிலிருந்து அகற்ற முடிவதுடன், அவ்வாறு அகற்றப்படுவது எந்தவொரு சவாலுக்கும் உட்படுத்தப்படக் கூடாது.

(2) அதிகார சபையின் அங்கத்தவர் தொடர்பாக அமைச்சரினால் மேலே (1) உப பிரிவின் கீழ்ப் பணிக்கப்படும் தினத்திலிருந்து அவ் அங்கத்தவரின் பதவிக்காலம் வெற்றிடமாகியதாகக் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(3) கேட்டு விலகிக் கொள்வதாக அமைச்சருக்கு கடிதம் ஒன்றையனுப்பி அதிகார சபைக்கு நியமிக்கப்பட்ட அங்கத்தவர் ஒருவருக்கு, அங்கத்துவ பதவியிலிருந்து அல்லது தவிசாளர் ஒருவருக்கு தமது பதவியிலிருந்து எவ்வேளையிலும் கேட்டு விலகிக்கொள்ள முடியும்.

முகாமைத்துவ சபையின் அங்கத்தவர் களுக்கு ஊதியத்தினை வழங்குதல்.

(4) அதிகார சபையின் முகாமைத்துவச் சபையின் எல்லா அங்கத்தவர்களுக்கும் அல்லது அங்கத்தவர்களில் சிலருக்கும் நிதி விடயப்பொறுப்புச் செயலாளரின் இணக்கத்துடன் இடைக்கிடையே வெளியிடப்படும் ஏற்பாடுகள் மற்றும் மாகாண திறைசேரியினால் வெளியிடப்படும் சுற்றறிக்கைகள், ஆலோசனைகள் மற்றும் ஏற்பாடுகளுக்கிணங்க ஊதியம் படி மற்றும் பிற செலவுகள் அதிகார சபையின் நிதியத்திலிருந்துசெலுத்தப்பட வேண்டும்.

8. (1) சபைக் கூட்டத்தின் கோரம் மூன்று அங்கத்தவர்கள் ஆக வேண்டும்.

சபையின் ஒழுங்குவிதிகள்.

(2) சபையின் அங்கத்தவர்களிடையே ஏதாவது வெற்றிடம் ஒன்று காணப்படுவது அல்லது அதன் அங்கத்தவர்களை தவறாக நியமித்ததன் காரணமாக சபையின் ஏதாவது ஒழுங்கான நடவடிக்கை அல்லது நடவடிக்கைகள் அதிகார மற்றவனவாக இடம்பெறக் கூடாது.

(3) முகாமைத்துவ அதிகார சபையின் கூட்டம் ஆகக் குறைந்தது ஒரு மாதத்திற்கு ஒரு முறையாவது இடம்பெற வேண்டும்.

(அ) எல்லாச் சபைக் கூட்டங்கள் தொடர்பாகவும் எழுத்து மூலமான அறிவிப்பு ஒன்று ஒவ்வொரு அங்கத்தவர்களுக்கும் கூட்ட தினத்திற்கு 03 நாட்களுக்கு முன் கிடைக்க வழிசெய்யப்பட வேண்டும். அக்கூட்டத்தில் மேற்கொள்ள உள்ள விடயங்கள் என்னவென அதில் குறிப்பிடப்பட வேண்டும்.

(ஆ) ஆகக் குறைந்தது இரண்டு அங்கத்தவர்கள் கையொப்பமிட்டு சமர்ப்பிக்கும் கடிதம் ஒன்றின் மூலம் சபையின் கூட்டத்தைக் கூட்டுமாறு வேண்டுகோள் விடுக்குமிடத்து தவிசாளரினால் சபையின் விசேட கூட்டமொன்று கூட்டப்பட வேண்டும்.

(இ) அமைச்சரினால் நியமிக்கப்படும் சபையின் அங்கத்தவர் ஒருவர் அங்கீகாரமின்றி மூன்று கூட்டத்தவணைகளில் பங்குபற்றாதவிடத்து அவ் அங்கத்தவரின் அங்கத்துவம் இரத்தாகும்.

(4) அதிகார சபையின் நடவடிக்கைகள் முகாமைத்துவ சபையினால் நிர்வகிக்கப்பட வேண்டும்.

(5) அதிகார சபையின் நடவடிக்கைகளை வினைத்திறன் மிக்கதாக நிர்வகிக்கத் தேவையான சுய அதிகாரங்களை மற்றும் விடயங்களை தவிசாளருக்கு, பணிப்பாளருக்கு அல்லது அதிகார சபையில் பணியாற்றுபவருக்கு முகாமைத்துவ சபையினால் ஒப்படைக்க இயலும்.

முகாமைத்துவ சபையின் செயலாளர்.

(6) அதிகார சபையில் பணியாற்றும் அலுவலகர்களிலிருந்து தகுதியான ஒருவரை முகாமைத்துவ சபையின் செயலாளராக நியமிக்க இயலும்.

(7) ஏதேனும் காரணம் தொடர்பாக முகாமைத்துவச் சபையின் அங்கத்தவர்களின் வாக்குகள் சமமாகப் பிரியுமிடத்து "அந்த உரிய கூட்டத்தில் தலைமைதாங்கும் நபரின்" தீர்மானவாக்கு வெற்றியைத் தீர்மானிக்கும்.

## பகுதி II

## அதிகார சபையின் நோக்கங்களும் அதிகாரங்களும்

9. அதிகார சபையின் நோக்கங்கள் பின்வருமாறு,

அதிகார சபையின் நோக்கம்.

(1) மாகாணத்தினுள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப சேவையை ஸ்தாபிப்பதன் மூலம் மக்களுக்கு இணையத்தளம் மற்றும் ஏனைய தொழில்நுட்பங்கள் ஊடாக அரச சேவைகளை வழங்குதல் மற்றும் மாகாணத்தின் ஈ- அரச கொள்கையினை நடைமுறைப்படுத்தல்.

(2) மாகாணத்திற்குரிய தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டங்களை திட்டமிடல், அபிவிருத்தி செய்தல், ஸ்தாபித்தல் மற்றும் பேணிச் செல்லுதல்.

(3) மாகாண சபைச் சேவைகளின் வினைத்திறன் அதிகரிக்க மற்றும் செயற்பாடுகளை தன்னியக்கமயமாக்க மென்பொருள் அமைப்பினை செய்தல்.

(4) மாகாண சபையின் அமைச்சு, திணைக்களம் மற்றும் தாபனங்களுக்காக இணையத்தளம் மற்றும் வலையமைப்புக்களை நிர்மாணித்தல்.

(5) மாகாண சபையின் எல்லாத் தாபனங்களுக்காகவும் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பத்திற்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை ஸ்தாபித்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்.

(6) மாகாண சபை எல்லா உத்தியோகத்தர்களுக்காகவும் கணினிக் கல்வியைப் பெற்றுக் கொடுத்தல் மற்றும் பயிற்சி வழங்குதல்.

(7) மாகாணத்தினுள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப விடயங்கள் மற்றும் கணினி விஞ்ஞானம் தொடர்பான அறிவை பிரபல்யஞ் செய்யத் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(8) மாகாணத்தினுள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவள அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள தாபனங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனைச் சேவைகள் மற்றும் பிற ஒத்துழைப்புக்களை வழங்குதல்.

(9) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நடவடிக்கை தொடர்பாக அதிகார சபையின் சேவையை எதிர்பார்க்கும் தனியார் பிரிவு அல்லது பிற தாபனங்களுக்கு சேவைக் கட்டணத்தினை அறவிட்டு வழங்குதல்.

10. அதிகார சபையின் அதிகாரங்கள் பின்வருமாறு:- அதிகார சபையின் அதிகாரங்கள்.

(1) அதிகார சபையின் நோக்கங்கள் மற்றும் விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களைக் கொள்வனவு செய்தல், குத்தகைக்கு அல்லது வாடகைக்கு இடல் அல்லது எடுத்தல், அடகு வைத்தல், விற்றல் அல்லது வேறு முறையில் விடுவித்தல்.

(2) அதிகார சபையின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தல் மற்றும் அதிகார சபையின் நோக்கங்களை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான ஒப்பந்தங்களுக்கு வருதல் மற்றும் உடன்படிக்கைகளுக்கு வருதல்.

(3) அதிகார சபையின் கீழ் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப செயற்றிட்டங்களை மேற்கொள்வதற்காக தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களில் பாண்டித்தியம் பெற்றவர்களை நிரந்தரமாக அல்லது அமைய அடிப்படையில் ஆட்சேர்த்தல் மற்றும் அச்செயற்றிட்டங்களின் மூலம் உழைக்கப்படும் வருமனத்தினைப் பயன்படுத்தி அவர்களுக்கு முகாமைத்துவ அதிகார சபை தீர்மானிக்கும் படியினைச் செலுத்துதல்.

(4) அதிகார சபையினால் மாகாண சபையினுள் அல்லது அதற்கு வெளியில் வழங்கப்படும் சேவைகளுக்காக முகாமைத்துவச் சபையின் சிபாரிசின் கீழ் கட்டணத்தை தீர்மானித்தல் மற்றும் அறவிடுதல்.

(5) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்தி நடவடிக்கைகளுக்குரியதான ஆராய்ச்சிகளை நடாத்துதல், அதற்காக உதவி செய்தல், இணைப்பு மற்றும் ஒத்துழைப்பினை வழங்குதல்.

(6) தகவல் தொழில்நுட்ப துறைக்குரிய வியாபாரத் திறமை தொடர்பான பயிற்சி நடவடிக்கை மற்றும் கல்விச் செயற்பாடுகளை மேற்கொண்டு செல்லுதல், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், மகா நாடுகள், வேலைத் திட்டங்கள், கல்விச் சுற்றுலாக்கள் மற்றும் அறிவு அத்துடன் தகவல்களை பகிர்ந்தளிப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்களை நடமுறைப்படுத்தல்.

(7) அமைச்சரின் முன் அனுமதியுடன் அதிகாரச் சபைக்குத் தேவையான உப காரியாலயங்கள் மற்றும் நிலையங்களைப் பேணிப் செல்லுதல்.

(8) மேலே 9 ஆவது பிரிவின் கீழ் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக ஒத்துழைப்பு வழங்கும் நிர்வாக மற்றும் நிதிப் பிரமாணங்களைத் தயாரித்தல்.

(9) தமது பணியாட்களுக்காக விடய நியமங்களை ஏற்படுத்துதல், அவர்களின் செயலாற்றுகை மதிப்பீடு மற்றும் தேவையான தீர்வினை வழங்குதல்.

(10) அதிகார சபையின் நோக்கத்தினை பூர்த்தி செய்வதற்குத் தேவையான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்தல்.

(11) தேசிய மற்றும் மாகாண சபைக் கொள்கைகளுக்கிணைந்த வகையியல் நிதி, தொழில்நுட்ப விஷேட ஞானம் அல்லது உதவிகளைப் பெற்றுக் கொள்ளுதல்.

(12) சந்தர்ப்பத்திற்கேற்ற முறையில் அதிகார சபையின் நிதியில், ஏதாவது அளவொன்றை, நிதி விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்துடன் முதலீடு செய்தல்.

11. (1) அதிகார சபையின் உத்தியோகபூர்வ இலட்சினை இந்நியதிச் சட்டத்தின் 13 (1) இன் கீழ் நியமிக்கப்படும் பணிப்பாளரின் பொறுப்பில் இருக்க வேண்டும். அதிகார சபையின் இலட்சினை.

(2) அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர் இருவர் முன்னிலையிலில்லாது எந்தவொரு சாதனப் பத்திரம் அல்லது ஆவணங்களில் அதிகார சபையின் இலட்சினை பொறிக்கப்படக் கூடாததுடன் தாம் வருகை தந்திருந்ததற்குரிய சாட்சியாக அவ்விருவரினாலும் அந்த சாதனப் பத்திரம் அல்லது ஆவணத்தில் தமது கையொப்பத்தினை இடவேண்டும்.

(3) இலட்சினை பொறிக்கப்பட்ட கடிதம் மற்றும் ஆவணங்கள் தொடர்பாக ஏடொன்று அதிகார சபையினால் அது ஆரம்பிக்கப்படும் தினத்திலிருந்து பேணப்பட வேண்டும்.

12. அதிகார சபையின் நோக்கங்களை நிறைவேற்றுதல் மற்றும் அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக விடயப்பொறுப்பு அமைச்சரினால் அதிகார சபைக்கு எழுத்து மூலமாக கட்டளையினை வழங்க முடிவதுடன் அதிகார சபையினால் அந்த கட்டளைகள் நடைமுறையிலிடப்பட வேண்டும். அதிகார சபை தொடர்பான அமைச்சரின் அதிகாரம்.

## பகுதி III

### அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி மற்றும் பிற பணியாட்கள்

அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரி.

13. (1) அதிகார சபையின் பிரதான நிறைவேற்று அதிகாரியாக இந்நியதிச் சட்டத்தில் இன்னகத்துப் பின் பணிப்பாளர் என அழைக்கப்பட்டு, அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க ஆட்சேர்ப்புச் செய்யப்படுபவர் முழு நேரமும் கடமையாற்ற முகாமைத்துவ அதிகார சபையினால் நியமிக்கப்பட வேண்டும்.

(2) அதிகார சபையின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வது, அதிகார சபையின் அதிகாரங்கள் மற்றும் விடயங்களை ஒழுங்கு செய்வது, நடைமுறைப்படுத்துவது மற்றும் அதிகார சபையில் கடமையாற்றுபவர்களின் நிர்வாகம் முகாமைத்துவ சபையின் பொது ஏற்பாடுகளுக்கு மற்றும் நிர்வாகத்திற்கு உட்பட்டதாக பணிப்பாளருக்கு கையளிக்கப்படும்.

அதிகார சபையின் ஏனைய பணிக் குழுவினர்.

(3) சுய பணியை வினைத்திறன் மிக்கதாக நிறைவேற்றுவதற்குத் தேவையானது என அதிகார சபை கருதும் ஏனைய அலுவலகர்கள் மற்றும் பணிக்குழுவினர் அங்கீகரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகளின் கீழ் அதிகார சபையினால் நியமிக்கப்படலாம்.

(4) அரச சேவையில் உள்ள ஒருவரை அதிகார சபையின் வேண்டுகோளின் பெயரில் உரிய உத்தியோகத்தர் மற்றும் நியமன உத்தியோகத்தரின் விருப்பத்துடன் அதிகார சபை தீர்மானிக்கும் கால எல்லைக்காக அதிகார சபையின் பணிக்குழுவிற்கு தற்காலிகமாக நியமிக்க முடியும்.

## பகுதி IV

### அதிகார சபையின் நிதியும் கணக்கும்

அதிகார சபையின் நிதியம்.

14. அதிகார சபையின் பெயரில் நிதியமொன்று காணப்பட வேண்டும்.அந் நிதியத்திற்கு,

(1) மாணியமாக மாகாண சபையினால் அதிகார சபைக்கு ஒதுக்கீடு செய்யப்படும் நிதி,

(2) இந்நியதிச் சட்டத்தின் கீழ் பணிக்கப்பட்டு சேகரிக்கப்படும் எல்லா நிதியும்,

(3) கட்டணம் மற்றும் அறவீடுகளாக அதிகார சபையினால் பொறுப்பேற்கப்படும் எல்லா நிதியும்,

(4) இலங்கையிலிருந்து அல்லது அதற்கு வெளியிலிருந்து ஏதாவதொரு முறையில் கிடைக்கும் நன்கொடைகள்,

(5) அதிகார சபைக்குரிய சொத்துக்கள், ஆதனம், பொருட்கள் மற்றும் உபகரணங்களை விற்று, வாடகைக்கு விட்டு, குத்தகைக்கு இட்டு கிடைக்கும் எல்லா நிதிகளும்,

(6) சில விஷேட செயற்றிட்டங்களை நிறைவேற்ற அல்லது ஏதாவது விடயங்களை நிறைவேற்றுவதற்காக அல்லது மாகாண சபை நிதியத்திலிருந்து அல்லது உள்ளூராட்சி தாபனங்களிலிருந்து கிடைக்கும் எல்லா நிதிகளும்,

(7) அதிகார சபைக்குரிய நிதியினை முதலீடு செய்வதால் அல்லது வைப்பிலிடுவதால் இலாபமாக, தவணைக் கட்டணம் அல்லது பிற வகையில் கிடைக்கப்பெறும் நிதி,

(8) பிற ஏதாவது சட்டரீதியிலான வழிகளில் தாபனத்திற்குக் கிடைக்கப்பெறும் நிதி வரவு வைக்கப்பட வேண்டும்.

15. நிதியத்திலிருந்து பின்வரும் விடயங்களுக்காகச் செலுத்தப்பட வேண்டும்.

நிதியத்திலிருந்து செலுத்துதல்.

(1) அதிகார சபையின் முகாமைத்துவ சபையின் அங்கத்தவர்களுக்குச் செலுத்தப்பட வேண்டிய ஊதியம்.

(2) அதிகார சபையின் உத்தியோகத்தர்களுக்கு, சேவகர்களுக்கு மற்றும் கடமையாற்றுபவர்களுக்குச் செலுத்த வேண்டிய சம்பளம்.

(3) அதிகார சபையின் சேவை வழங்குநர்களுக்கு செலுத்த வேண்டிய கொடுப்பனவு மற்றும் ஊதியம்.

(4) தமது அதிகார விடயங்கள் மற்றும் செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் மற்றும் மேற்கொள்ளுதல் தொடர்பாக மாகாண நிதிப் பிரமாணத்திற்கு இணங்க அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட செலவு.

16. அதிகார சபையின் நிதியாண்டு பஞ்சாங்க வருடமாக வேண்டும். நிதி வருடம்.

17. அதிகார சபையின் வருமானம் மற்றும் செலவு தொடர்பாகவும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாகவும் கணக்கு மற்றும் புத்தகங்கள் பேணப்பட வேண்டும். அதிகார சபையின் கணக்கு.

18. ஒவ்வொரு நிதி வருடமும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் நிறைவுபெறும் வருடத்திற்காக நிதிக்கூற்று தயாரிக்கப்பட வேண்டும்.அந்த நிதிக்கூற்று அடுத்த வருடம் மாச்சு 31 ஆந் திகதிக்கு முன் கணக்காளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். நிதிக்கூற்று.

19. ஒவ்வொரு நிதி வருடமும் திசெம்பர் மாதம் 31 ஆந் திகதியில் எல்லாச் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக பொருட் கணக்கொடுப்பு மேற்கொள்ளப்பட வேண்டும்.

20. ஒவ்வொரு வருடமும் ஆரம்பமாக முன் உரிய வருடத்திற்கான மதிப்பீட்டினைத் தயாரித்து வருடம் ஆரம்பமாக முன் முகாமைத்துவ சபையின் அங்கீகாரத்தினைப் பெற வேண்டும்.

21. கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கு மற்றும் கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ஒவ்வொரு வருடமும் கிடைத்தவுடன் அவ் அறிக்கையும், உரிய வருடத்தினுள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையும், அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன், அவரினால் அவ் அறிக்கைகள் விரைவாக மாகாண சபைக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

## பகுதி V

## பொது விடயம்

22. (1) இந் நியதிச் சட்டத்தின் கீழ் ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்த, அதிகாரப்படுத்த மற்றும் கட்டணங்களை அறவிடுவதற்குரிய எல்லா விடயங்கள் அல்லது ஏதாவது விடயம் ஒன்று தொடர்பாக இந் நியதிச் சட்டத்தில் ஒப்படைக்கப்படும் அதிகாரங்களுக்குப் பாதிப்பொன்று ஏற்படாதபடி விதிகளைத் தயாரிப்பது விடய அமைச்சரினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(2) இப் பிரிவின் கீழ் விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு விதியும் வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட வேண்டியதுடன், அவ்வாறு பிரசுரிக்கப்படும் தினம் அல்லது அந்த விதிகளில் குறிப்பிடப்படும் ஏதாவது தினம் தொடக்கம் அது நடைமுறைக்கு வர வேண்டும்.

(3) விடயப் பொறுப்பு அமைச்சரினால் தயாரிக்கப்படும் ஒவ்வொரு விதியும் அது வர்த்தமானப் பத்திரிக்கையில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து மூன்று மாத காலத்தினுள் அங்கீகாரத்திற்காக மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.அவ்வாறு மாகாண சபையினால் அங்கீகரிக்கப்படாத ஏதாவது விதி ஒன்று அவ்வாறு அங்கீகரிக்கப்படாத தினம் தொடக்கம் இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்பட வேண்டும். எனினும் அதன் கீழ் முன்னர் மேற்கொள்ளப்பட்ட எந்தவொன்றுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடாது.

## பகுதி VI

## இடைக்கால விதிமுறை

23. (1) இந்த சாசனத்திற்கு மேல் மாகாண கௌரவ ஆளுநர் அவர்களின் அனுமதி கிடைத்த தினத்திலிருந்து மேல் மாகாண சபை 2000 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் வள அபிவிருத்தி சாசனம் பரீட்சார்த்தகரமாக செயற்படுத்தப்படுகின்றது.

(2) அவ்வாறாக 2000 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் வள அபிவிருத்தி சாசனத்தின் கீழ் தொடங்கப்பட்டமேல் மாகாண தகவல் தொடர்பாடல் வள அபிவிருத்தி நிறுவனத்தின் உடைமையில் உள்ள:

(அ) அனைத்து அசையும் அசையாச் சொத்துக்கள் மற்றும்

(ஆ) அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள்

இந்த சாசனத்தின் கீழ் அதிகார உடைமையில் அசையும் அசையாச் சொத்துக்கள் யாவும் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்ற வகையில் கொள்ளப்படும்.

(3) 2000 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் வள அபிவிருத்தி சாசனத்தின் கீழ் ஆற்றப்படக்கூடிய செயல்கள், இந்த சாசனத்தின் கீழ் ஆற்றப்படக்கூடிய செயல்களாக கருதப்படும்.

(4) மேலும் 2000 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க தகவல் தொடர்பாடல் வள அபிவிருத்தி சாசனத்தின் கீழ் தொடங்கப்பட்ட மேல் மாகாண சபையினது தகவல் தொடர்பாடல் வள அபிவிருத்தி நிறுவனத்தின் அதிகாரி அல்லது ஊழியர் இதன் அதிகார அதிகாரி அல்லது ஊழியராகக் கருதப்படுவர்.

பொருள் கொள்ளல் பிரிவு.

24. இந்நியதிச் சட்டத்தில் சொற்கள் தொடர்பாக பொருள் தேவைப்பட்டாலொழிய "அமைச்சர்" என்பது மேல் மாகாண மாகாண சபையின் தகவல் தொழில்நுட்ப விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற கருத்தாகும்.

ஒவ்வாமை ஏற்படுமிடத்து சிங்கள மொழிப் பதமே அதிகாரம் பெற வேண்டும்.

25. இந் நியதிச் சட்டத்தின் சிங்கள மற்றும் தமிழ்மொழிச் சொற்களுக்கிடையே முரண்பாடு ஏற்படுமிடத்து சிங்கள மொழிச் சொல்லே அதிகாரம் பெற்றதாக வேண்டும்.

10 - 670